12th March 1965]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன். : திண்டிவனத்தில் ஏற்பட இருக்கிற தீயணைக்கும் படை எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. பூ. கக்கன் : திண்டிவனத்தில் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

பஞ்சாயத்துத் தேர்தல்கள் பற்றி மாநில அரசினரின் கருத்துக்கள்

*220 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஊராட்சி மன்றத் தேர்தல் முறை பற்றி ஆராய்ந்து முடிவு கூற, உயர்திரு. சந்தானம் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் முன் நம் மாநில அரசு எடுத்து வைத்த கருத்துக்கள் அடங்கிய அறிக்கையின் நகல் ஒன்று சபை முன் வைக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : திரு. கே. சந்தானம் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட பஞ்சாயத்து ஆட்சித் தேர்தல் குழுவின் முன் இந்த மாநில அரசாங்கத்தின் கருத்துக்கள் அடங்கிய அறிக்கை எதுவும் வைக்கப்படவில்லை.

திரு. செ. மாதவன் : நம்முடைய அரசாங்கம் அந்தக் குழு இங்கு வந்திருந்தபோது என்னென்ன விவரங்களைக் கொடுத்தது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்துத் தேர்தல்கள் நல்ல முறையிலே நடைபெறுகிறதா, என்னென்ன அடிப்படைகளின் மீது இந்த மாநிலத்தில்பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெறுகின்றன, விதிகள் அனுஷ்டிக்கப்படுகிறதா, என்றெல்லாம் கேட்டார்கள். எல்லா விவரங்களையும் சொன்னோம். மூன்று ஆண்டுகளுக்கா, ஐநது ஆண்டுகளுக்கா, ரகசிய வோட்டு முறை, இது பற்றிய பல பிரச்னைகளை விவாதித்தார்கள். தனிக் கேள்வி போட்டால் என்ன விவரம் சொல்ல முடியுமோ விடை அளிக்கிறேன். பொதுவாக ஒரு மணி நேரம் விவாதம் நடந்தது.

திரு. ஜே. மாதா கவுடர் : தற்போது நடந்த பஞ்சாயத்துத் தேர்தலில் ஒரு வார்டுக்கு இரண்டு, மூன்று பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அடுத்த பஞ்சாயத்துத்தேர்தலிலாவது இம்மாதிரி இல்லாமல் ஒரு வார்டுக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அடுத்த தேர்தல் வரும்போது இந்த பிரச்னை சிந்திக்கக்கூடிய விஷயம். இப்போது ஒன்றும் செய்வதற்கு இல்லை.

திரு. செ. மாதவன் : டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கௌன்சில் சேர்மனை தேர்தல் முறையிலே தேர்ந்தெடுத்து கொண்டுவரவேண்டுமென்ற கருத்தை அந்தக் குழு நம் அரசாங்கத்திடம் பரிசீலிக்கும்படி கேட்டுக்கொண்டதா ? பஞ்சாயத்து யூனியன் தலைவரையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்க அரசாங்கத்தின் கருத்தைத் கேட்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நமது மானிலத்திலே எந்தெந்த முறையிலே தேர்தல் நடத்தப்படுகிறது, விதிகள் என்ன என்பதைப் பற்றிக் கேட்டார்கள். நாங்கள் எல்லாவற்றிற்கும் பதில் சொன்னோம். அவர்கள் கருத்து என்ன என்பதை அவர்கள் கூறவில்லை.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, இப்போது நடைபெற இருககிற ஊராட்சிமன்றத்தலைவர் தேர்தலுக்கு முன்பாக, காலியாக இருக்கும் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கான தேர்தல் நடைபெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அநேகமாக நடைபெறலாம்.

[12th March 1965

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் தேர்தலைப்பற்றிக் கேட்டால் தேர்தல் வருவதற்கு முன் கேட்டால், அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்றும், தேர்தல் வரும்போது கேட்டால் காலம் கடந்து விட்டது என்றும் மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டே வந்தால், மக்கள் நிலைமை என்ன ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்தக் கேள்வி இந்தக் குழுவின் முன்பு விவாதித்த பிரச்சினை பற்றியது அல்ல.

டாக்டர் பா. நடராஜன் : பஞ்சாயத்து பெரும் தலைவர் தேர்தலுக்கு நேரடித் தேர்தல் முறையைக் கையாள வேண்டுமென்று இந்த அரசாங்கம் அந்தக் கமிட்டியிடம் கூறியுள்ளதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி கூறியுள்ளதாக ஞாபகம் இல்லை.

திரு. எஸ். முருகையன்: பல இடங்களிலே பஞ்சாயத்துத் தேர்தல் நடந்த நேரத்தில் ஒரு வார்டுக்கு மூன்று பேராயிருந்தால் நான்கு பேராகவும், நான்கு ஆகஇருந்தால் ஐந்தாகவும் தவறுதலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறார்கள். அதைப் பற்றி அரசாங்கத்திற்கு முறையீடு வந்ததா ? அடுத்த பஞ்சாயத்து தலைவர் தேர்தலுக்குள்ளாவது உறுப்பினர் தேர்தலை நடத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஒரு சில இடங்களிலே இம்மாதிரித் தவறுகள், எலெக்ஷன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனக் குறை வினால் ஏற்பட்டுள்ளது. தவறுகளைத் திருத்துவது பற்றிக் கவனிக்கப்படும்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தக் குழுவின் முன்பு நம் சர்க்கார் கூறிய ஆலோசனைகள், சபை அங்கத்தினர்களுக்குத் தெரியக் கூடாது வென்று சர்க்கார் கருதுகிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : குழுவுடன் பேசும்போது ஒரு மணிக்கு மேல் விவாதம் நடந்தது. பூரணமாக கனம் அங்கத்தினர் என்ன நடந்தது என்று கேட்டால் இப்போதுள்ள 1958-வது சட்டப்படி எப்படி தேர்தல் நடைபெறுகிறது என்பதுதான் கூறப் பட்டது. வேறு கருத்து இல்லை. அதிக விளக்கம் வேண்டுமென்றால் 1958-வது சட்டத்தை பார்த்துக்கொண்டால் போதும், அந்த விஷயங்களைத் தான் நாங்கள் கூறியிருக்கிறோம்.

திரு. செ. மாதவன் : ஊராட்சி மன்றத் தேர்தலில் அரசியல் கட்சிகள் பங்கு கொள்ளக்கூடாது, பிளவு மனப்பான்மை ஏற்படக்கூடாது என்ற முறையில் தேர்தல் நடைபெறவேண்டுமென்ற கருத்து ஆராயப்பட்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பஞ்சாயத்து அடிப்படையில், ஜனநாயகம் சம்பந்தப்பட்டமட்டில், மக்கள் ஆட்சி அடிப்படையான அம் சம். பஞ்சாயத்துத் தேர்தலில் அரசியல் கட்சிகள் தலையிட்டுக் குழப்பினால், கிராமச் சூழ்நிலை நன்றாக இருக்காது என்று அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். ஆனால் முடிவான அபிப்பிராயம் அது அல்ல.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களில் அரசியல் கலக்கக் கூடாது என்ற அளவுக்குக் கொள்கைகளிலே அமைச்சர் ஒப்புக்கொள்ளுகிற நேரத்தில், நகராட்சியிலும் அரசியல் கலக்காவண்ணம் பார்த்துக்கொள்ள ஏதாவது வழி செய்ய முடியுமா ? அவர்கள் ஏதாவது ஆலோசனை கூறினார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இது பஞ்சாயத்துத் தேர்தல் களைப் பற்றிப் பரிசீலனை செய்ய அமைக்கப்பட்ட கமிட்டி.

12th March 1965]

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாவட்டம் ஒன்றுக்குக் குறைந்தது ஒன்றிரண்டாவது பெரும் தலைவர்களுக்காக ரிஸர்வ் சீட் ஒதுக்கவேண்டுமென்று சர்க்கார் அபிப்பிராயம் தெரிவித்ததா? அப்படி என்றால் அவர்கள் என்ன முடிவு சொன்னார்கள் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அம்மாதிரி விவரம் பரிசீலித்ததாக எனக்கு ஞாபகம் இல்லை.

திருச்சிராப்பள்ளி நகராட்சிமன்ற உறுப்பினர்களுக்குப் படி வழங்குவது பற்றிய தீர்மானம்

*221 கேள்வி.—**திரு. எஸ். முருகையன் :** (திரு. மு. கருணாநிதி சார்பில்) : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு அலவன்ஸ் தரவேண்டு மென்று திருச்சி நகராட்சியிடமிருந்து அரசாங்க அனுமதிக்காக தீர்மானம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) and (இ) பாராளுமன்ற உறுப்பினர்கட்கும், சட்ட மன்ற உறுப்பினர்கட்கும் மாதந்தோறும் படி கொடுப்பதைப் போலவே திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்ற உறுப் பினர்கட்கும் கொடுக்க வேண்டுமென்று திருச்சிராப்பள்ளி நகராட்சி மன்றம் பிரேரணை கொண்டு வந்தது. 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ், அவ்வாறு படி கொடுப்பதற்கு அனுமதி இல்லையாதலால், அந்தப் பிரேரணையை ஏற்றுக்கொள்வதற்கு இடமில்லை.

கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்து எழுத்தருக்கெதிரான வழக்கு

*222 கேள்வி.—**திரு. பி. முருகையன்:** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்தில் போலீஸ் நடவடிக்கை மூலம் அங்கு பணிபுரிந்த எழுத்தர் சம்பந்தப்பட்ட வழக்கு சர்க்காருக்குப் பாதக மாக உள்ளது உண்மையா ?

(இ) அவ் வழக்கை சர்க்காரே எடுத்துக்கொள்ளவேண்டி மனுக்கள் வந்தனவா ?

(உ) ஆமெனில், துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு சே. ம. அ. மஜீத் : (அ) கரம்பக்குடி பஞ்சாயத்து முன்னாள் குமஸ்தா திரு. சி. சோமசுந்தரம் என்பவருக்கு புதுக்கோட்டை உதவி செஷன்ஸ் நீதிபதி மூன்றாண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்தார். அப்பீலில் திருச்சி ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜ் அவரை விடுதலை செய்தார். எனினும் அவர்மீது இலாகா ரீதியில் நடவடிக்கை எடுத்துக்கொண்டு, கரம்பக்குடி பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, இந்த வழக்கு போலீஸாரால் தொடரப்பட்டது. நிர்வாகத்தால் ஏன் தொடரப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு சே. ம. அ. மஜீத் : போலீஸார் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்கள் பதிவு செய்திருக்கலாம். நிர்வாக சம்பந்தப்பட்டவர் களும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதனால்தான் இவர்கள் இருவரும் ஸஸ்பெண்ஷனில் இருக்கிறார்கள்.